தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in
முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

முறையீட்டு மனு எண். 157/மா/2024,
நாள் 18.12.2024

திரு கோ. கோவிந்தராஜ், ............ முறையீட்டு மனுதாரர்
சென்னை.

மண்டல அலுவலர், ............ எதிர் மனுதாரர்
மண்டலம் 10,
பெரு நகர சென்னை மாநகராட்சி.

சென்னை, அசோக் நகர், 15வது தெரு, கதவு எண். 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ.கோவிந்தராஜ் என்பவரின் 02.09.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2024 அன்று பெறப்பட்டு, 157/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது

**ஆணை**

சென்னை, அசோக் நகர் 15வது தெரு, கதவு எண்.22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு கோ. கோவிந்தராஜ் என்பவர் 02.09.2024 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்.

நான் குடியிருக்கும் என்னுடைய வீட்டிலிருந்து 250 மீட்டர் தொலைவில் 5வது அவின்யூ, அசோக் நகர், எண். SP/2/1,என்கிற முகவரியில் C. Babulal Pawn Broker தரைதளத்தில் வணிக வளாகமும், அதற்கு மேல் மூன்று தளத்தில் வீடுகள் உள்ளது. இக்கட்டிடம் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியின் வரைபட அனுமதியை மீறி கட்டப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாயை ஆக்கிரமித்து சுமார் 5 அடி உயரம், 10 அடி அகலம், 20 அடி நீளத்தில் கிரானைட் கற்களால் பொருத்தப்பட்ட படிகட்டுகள், ஸ்டீல் பைப்புகளால் கைப்பிடி அமைத்துள்ளதால், மழைக்காலங்களில் மழைநீர் செல்ல முடியாமலும், பாதசாரிகள் அவ்வழியாக செல்ல முடியாமலும் சாலையின் நடுவே நடந்து செல்லும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட கட்டிடம் முறையாக வரைபட அனுமதியின்படி கட்டப்பட்டுள்ளதா என்று ஆய்வு செய்யுமாறும், மழைநீர் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றி உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலர்களுக்கு உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற 27.09.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 05.12.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.11.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 05.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"எனது வீட்டிலிருந்து சுமார் 250 மீட்டர் தொலைவில் அசோக் நகர் 5வது அவின்யூ, எண். SP/2/1, என்ற முகவரியில் உள்ள C. Babulal Pawn Broker என்பவர் தரை தளத்தில் வணிக வளாகமும், அதற்கு மேல் மூன்று தளங்களில் வீடுகளும் உள்ளது என்றும் இக்கட்டிடத்திற்கு முறையாக வரைபட அனுமதி பெறாமல் விதிகளை மீறி கட்டப்பட்டுள்ளதாக தெரிகிறது என்றும், பெரு நகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மழை நீர்கால்வாயை ஆக்கிரமித்து சுமார் 5 அடி உயரம், 10 அடி அகலம், 20 அடி நீளத்தில் படிகட்டுக்கள் மற்றும் இரும்பு பைப்புகள் வைத்து கைப்பிடி அமைத்துள்ளார்கள். அதனால் பொதுமக்கள் அவ்வழியே செல்ல முடியாமல் அவதிப்படுகிறார்கள். எனவே, மழைநீர் கால்வாயை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள படிகட்டுகளை அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்க, இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் 05.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

சென்னை அசோக் நகர், 5வது அவின்யூயை கள ஆய்வு செய்த பொழுது அவ்விடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளின் ஒரு பகுதியான வெளியே உள்ள Concrete தரை அகற்றப்பட்டது. மேலும் இரண்டு வாரத்துக்குள் அந்த ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறேன். மழைநீர் வடிகால்வாய் நிரந்தரமாக அமைக்க கருத்துரு தயார் செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தன் வீட்டிலிருந்து 250 மீட்டர் தொலைவில் அசோக் நகர், 5வது அவின்யூ, எண்.SP/2/1,என்கிற முகவரியில் C. Babulal Pawn Broker தரைதளத்தில் வணிக வளாகமும், அதற்கு மேல் மூன்று தளத்தில் வீடுகள் உள்ளது என்பதும், மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாயை ஆக்கிரமித்து சுமார் 5 அடி உயரம், 10 அடி அகலம், 20 அடி நீளத்தில் கிரானைட் கற்களால் பொருத்தப்பட்ட படிகட்டுகள், ஸ்டீல் பைப்புகளால் கைப்பிடி அமைத்துள்ளதால், மழைக்காலங்களில் மழைநீர் செல்ல முடியாமலும், பாதசாரிகள் அவ்வழியாக

செல்ல முடியாமலும் சாலையின் நடுவே நடந்து செல்லும் நிலை உள்ளது என்றும் மழைநீர் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, 5வது அவின்யூவில் உள்ள ஆக்கிரமிப்பு இடம் கள ஆய்வு செய்யப்பட்டதும், அவ்விடத்தின் ஆக்கிரமிப்புகளின் ஒரு பகுதியான வெளியே போடப்பட்டிருந்த கான்கீரிட் தரை அகற்றப்பட்டது என்பதும் மேலும், அங்கு எஞ்சி உள்ள ஆக்கிரமிப்புகளை இரண்டு வாரத்திற்குள் அகற்றப்படும் என்பதும், 5வது அவின்யூ பகுதியில் மழைநீர் வடிகால்வாய் நிரந்தரமாக அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

7. இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் தனது வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு, சட்ட விதிகள், உயர்நீதிமன்ற ஆணைகள் மற்றும் அரசு வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மூன்று மாதங்களுக்கு பின்னர் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தினைஆய்வு செய்து ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்பதை உறுதி செய்து, அது குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்,

1) திரு கோ. கோவிந்தராஜ்,
எண். 22/43, 15வது தெரு,
அசோக் நகர்,
சென்னை 83.

2) ஆணையர்
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 64 என்.எஸ்.கே. சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை 24.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 28.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 28.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ / உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை - 600 032

20/12/24

20/12/24